**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2025=ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.2 ஜெயராமன் வயது 54 த/பெ கோபால்**

**நேரம் - 12.25**

**குறுக்கு விசாரணை**

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் எங்கள் அறக்கட்டளையில் நான் தலைவராக உள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2009ம் வருடம் கோயில் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது என்றால் சரிதான். கோயில் கட்டிய 2009ம் வருடத்தில் எந்த அறக்கட்டளையோ, கமிட்டியோ கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் 2015ம் ஆண்டு தயார் செய்து அதன் பின்னர்தான் அறக்கட்டளை தொடங்கப்பட்டது என்றால் சரிதான். முதலில் கோயிலின் கட்டிடம் எழுப்பிய காலத்திலிருந்து முடியும் காலம் வரை வாதி பாஸ்கரன்தான் முன் நின்று மேற்படி பணிகளை கவனித்து வந்தார் என்றால் பொதுவாக அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்துதான் கோயில் கட்டப்பட்டது.

2. அதேப்போல் கோயிலுக்கான மின் கட்டண இணைப்பை பழனி என்பவர்தான் பெற்றார் என்றால் சரிதான். பழனி என்பவர் வாதி பாஸ்கரன் ஆரம்பித்த அறக்கட்டளையின் உறுப்பினராக இருந்து வந்தார் என்றால் சரிதான். வாதி பாஸ்கரன் வா.சா.ஆ.1 அறக்கட்டளையை ஆரம்பித்த பின்னிட்டுதான் 2015ம் ஆண்டு பி.வா.சா.ஆ.1 அறக்கட்டளையை நாங்கள் ஆரம்பித்தோம் என்றால் சரிதான். நாங்கள் எதற்காக திருத்தல் பத்திரமான பி.வா.சா.ஆ.2ஐ தாக்கல் செய்துள்ளோம் என்றால் பி.வா.சா.ஆ.1ல் சாமி என்ற இடத்தில் பிழை இருந்ததால் அதை சுவாமி என்று மாற்றம் செய்ய வேண்டி திருத்தல் பத்திரம் தாக்கல் செய்துள்ளோம்.

3. 03.11.2016ம் தேதி மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணமான திருத்தல் பத்திரம் ஏற்பட்டது. 2015ம் ஆண்டிற்கு முன் எந்த அறக்கட்டளையும் நாங்கள் ஆரம்பிக்கவில்லை என்றால் சரிதான். கோயிலுக்கான மின் இணைப்பில் செலுத்துபவரின் பெயர் உறுப்பினர் என்றுதான் வருகிறது என்றாலும், குறிப்பிட்டு யார் பெயரும் வரவில்லை என்றாலும் பழனி ஆரம்ப காலத்தில் கட்டி வந்தார், அதன்

பின்னிட்டு பொதுவாக நாங்கள் அனைவரும் அறக்கட்டளை வழியாக கட்டி வருகிறோம். பி.வா.சா.ஆ.23 முதல் 38 வரையான மின் கட்டண ரசீதுகளில் அறக்கட்டளை என்றுதான் வருகிறது என்றாலும், பொதுவாக உறுப்பினர்களின் பெயர்களை குறிப்பிட்டு வரவில்லை என்றால் சரிதான்.

4. அதேப்போல் வாதி மேற்படி மின் கட்டண ரசீதுகளான வா.சா.ஆ.9 முதல் 22 வரை மின் கட்டணம் கட்டியதற்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.22 எதற்காக தாக்கல் செய்தோம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு கோயில் இடம் யாருடையது என்று தெரியாமல் கோயில் கட்டி வந்தோம், ஆகையால் சேவூர் பஞ்சாயத்தில் பேசி ரசீது பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி பி.வா.சா.ஆ.22 ஆவணம் ஏன் என் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தற்போது சரியாக ஞாபகமில்லை.

5. மேற்படி பி.வா.சா.ஆ.22 ஆவணமானது என்னுடைய வீட்டு வரி ரசீது என்றாலும், அதற்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ.4 முதல் 12 வரையான ஆவணங்கள் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றதற்கான அழைப்பிதழ்கள் என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து விட்டு சரிதான் என்று கூறுகிறார். மேற்படி பி.வா.சா.ஆ.4 முதல் 12 வரையான ஆவணங்களில் உறுப்பினர்கள் யார் பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. அதேப் போல் வாதியும் வா.சா.ஆ.2 ஆவணம் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றதற்கான அழைப்பிதழ் என்றால் சரிதான். நாங்கள் எங்கள் தரப்பில் நிர்வாகம் செய்ததற்காக பி.வா.சா.ஆ.15 மற்றும் 16 ஆவணங்களை வரவு செலவு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 15 ல் சீட்டு என்று வரவு செலவு குறிப்பிட்டுள்ளது எதற்காக என்றால் பொதுவாக 20 பேர் சேர்ந்து சீட்டு நடத்தி அந்த பணத்தை நன்கொடையாக கொடுத்தார்கள். மேற்படி சீட்டு கோவிலில் நடைபெற்றதா என்றால் இல்லை. அதேப்போல் பி.வா.சா.ஆ.13 மற்றும் 14ல் சீட்டு என்று வரவு செலவு குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ.15 ல் காவல் நிலையம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வாதி நாங்கள் அனைவரும் கோவிலில் சீட்டு வந்ததை ஆட்சேபணை செய்ததால் எங்களுக்கும் அவருக்கும் விரோதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாதி கோயிலில் சீட்டு நடத்த கூடாது என்ற நல்ல

எண்ணத்தில்தான் மேற்படி செயல்களை தடுத்து நிறுத்தினார் என்றால் சரியல்ல. சாட்சி தன்னிச்சையாக காவல் நிலையம் என்று வரவு செலவில் குறிப்பிடப்பட்டுள்ளதை உறுப்பினர்களுக்கு டீ மற்றும் சாப்பாடு செலவுகளைதான் காவல் நிலையம் என்று குறிப்பிட்டுள்ளோம். எதற்காக சாப்பாடு மற்றும் டீ செலவுகளை காவல் நிலையம் என்று குறிப்பிட்டோம் என்றால் 50 பேர் காவல் நிலையத்திற்கு வந்து போனதால் அதுப்போல் குறிப்பிட்டோம்.

8. மேற்படி சீட்டு நடத்துவதை வாதி தட்டிக் கேட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றாலும், நாங்கள் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி காவல் நிலையத்தில் பேசியதில் அந்த செலவைதான் காவல் நிலையம் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல, எங்களுக்கு காவல் நிலைய செல்வாக்கு மற்றும் அரசியல் செல்வாக்கு இல்லை, ஊர் பொதுமக்கள் மற்றும் உறுப்பினர் சேர்ந்துதான் கோயில் நிர்வாகம் செய்து வருகிறோம்.

9. பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் கையொப்பங்கள் பெற்றுள்ளவர்களின் தந்தை பெயர் மற்றும் விலாசம் எதுவும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்காக மேற்படி பி.வா.சா.ஆ.17 ஆவணத்தை நாங்களாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல, நான் மேற்படி 50 நபர்களையும் சாட்சியாக அழைத்து வந்து நிரூபிக்கிறேன். பி.வா.சா.ஆ.18 ஆவணத்தில் கையொப்பங்கள் பெற்றுள்ளவர்களின் தந்தை பெயர் மற்றும் விலாசம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தற்போது கோயிலின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

10. இந்திராகாந்தி என்பவர் கோயிலுக்காக மேற்படி இடத்தை தானமாக கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி விவரம் எதையும் நாங்கள் அறக்கட்டளை பி.வா.சா.ஆ.1 மற்றும் 2ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2009 முதல் 2014 வரையான எந்த ஆவணங்களும் நாங்கள் கோயில் நிர்வாகம் செய்ததற்கு இல்லை என்றாலும், 2015ம் ஆண்டு மட்டும்தான் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் உள்ளது என்றாலும், அதன் பின்னிட்டு 2016 லிருந்து இன்றைய தேதி வரைக்கும் எந்த ஆவணமும் நாங்கள் நிர்வாகம் செய்ததற்கு இல்லை என்றால் சரிதான்.

11. அறக்கட்டளை ஏற்படுத்திய பிறகு மாதம் மாதம் எந்த கூட்டமும் நடத்தப்படவில்லை என்றால் சரிதான். கணக்கு சம்மந்தமாக பி.வா.சா.ஆ.13 முதல் 15 வரையான ஆவணங்களை தவிர்த்து வேறு எந்த ஆவணமும் எங்களிடம் இல்லை என்றால் ஞாபகமில்லை.

வாதி வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

நேரம் - 1.15.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court, Arni